உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௫௨.] மன்மத-௵—தை-மீ [பகுதி- ௩.

Vol. 52. January-February—1956. No. 3.

உள்ளுறை

அருள் மொழி: 65
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

இயற்கையும் கவிஞரும்: 70
சுப. அண்ணாமலை

உயிர்ப் பொருள் பேணல்: 77
சாமுவேல் ஆபிரகாம்

இலக்கியச் சூழ்நிலையில் புராணங்கள்: 87
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செக்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பணையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. கி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-ருஉ.]	மன்மத-ஞு—தை-மீ	[பகுதி-ங.
Vol. 52.	January–February—1956.	No. 3.

அருள் மொழி

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

அன்பு, அருள்

மனைவி கணவன் மீது செலுத்தும் பிரியமும், கணவன் மனைவி மீது செலுத்தும் பிரியமும், பெற்றோர் பிள்ளைகள் மீது செலுத்தும் பிரியமும், பிள்ளைகள் பெற்றோர் மீது வைக்கும் பிரியமும், இவ்வாறே உற்றார் உறவினர் மீது கொள்ளும் பாசமும் அன்பு என்று சொல்லப் படும். இது பெரும்பாலும் பயன் கருதி ஏற்படுகிறது.

பகைவனிடமும் பரிவுகாட்டலும், ஒரு பயனையும் எதிர்பாராது ஏழை எளியவரிடம் இரக்கம் காட்டலும், உதவலும், இவ்வாறே எல்லா உயிர்களிடத்தும் இரக்க உணர்ச்சி காட்டலும், அருள் என்று சொல்லப்படும். புத்தர் பெருமான் கொலை, வேள்வி செய்யலாகாது என்று பிம்பிசாரனைத் தடுத்ததும், இயேசுநாதர் நடக்கமுடியாது தவித்த நொண்டி ஆட்டுக்குட்டியை இரக்க உணர்ச்சியோடு தூக்கிக் கொண்டு வழிநடந்ததும், வட்டமேசை மாநாட்டுக்கு இங்கிலாந்து சென்றிருந்த காந்தியடிகள் நொண்டி ஆட்டுக்குட்டியைத் தூக்கிநடந்ததும் இவ்வருள் உணர்ச்சியின்பாற்பட்ட செயல்களாகும்.

அருள் மொழிகள்

தன்னலந் துறந்து எல்லாவுயிரும் இன்புறல் வேண்டும் என்று உளமார நினைத்து எல்லா உயிர்களிடத்தும் இரக்கங் காட்டிய அருளாளரே புத்தர், இயேசுநாதர், முகம்மது நபி, தாயுமானவர், இராமலிங்கர், காந்தியடிகள் போன்ற பெருமக்களாவர். அப்பெருமக்களது அருள் உணர்ச்சியினின்றும் வெளிப்போந்த மொழிகளே அருள் மொழிகள் என்பன.

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"

என்பது அருள்மொழி நல்கும் தாயுமானவர் திருவாக்காகும்.

சமுதாய நிலை

இவ்வாக்குப்படி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமாயின், மனித சமுதாயத்தில் மக்களிடை மனிதப்பண்பு மலர்ந்திருத்தல் வேண்டும். எது மனிதப்பண்பு? "உன்னைப்போல் பிறரையும் நேசி", என்ற இயேசுநாதரின் பொன்னுரைப்படி மனிதன் தன்னைப் போலப் பிறரை மதித்து நடத்தலே மனிதப்பண்பு. இப்பண்புடைய மனித சமுதாயத்தில்தான் அன்பு மலரும், அருள் அரும்பும். ஒருவன் தன்னைப்போலப் பிறரை மதிக்கவேண்டுமாயின், அவனது சமுதாயத்தில் அப் பண்பினைக் குறைக்கும் சாதிவேறுபாடுகள், செல்வன்—வறியன் என்ற வேறுபாடு முதலியன தலைகாட்டலாகாது. அயல்நாடுகளில் பிறவியினால் உயர்வும் தாழ்வும் கற்பித்துக்கொண்ட பாழான சாதிப்பிரிவுகள் இல்லை; ஆயின் செல்வன்—வறியன் என்ற வேறுபாடு இருந்து வருகிறது. அறநெறி கற்பிக்கும் அறிவுக்களஞ்சியம் என்று போற்றப்படும் வேதங்கள் முதலிய எண்ணிறந்த நூல்களும், உலகத்தை உய்விக்கத் தோன்றியனவாகக் கூறப்படும் பத்து அவதாரங்களும் தோன்றின நம்நாட்டில் ஆயிரக்கணக்கான சாதிகளும், செல்வன்—வறியன் என்ற வேறுபாடும், நகரத்தான்—கிராமத்தான் என்ற வேறுபாடும் பல நூற்றாண்டுகளாக வேரூன்றி வளர்ந்து இந்திய சமுதாயத்தை மனிதப் பண்பாடற்ற சமுதாயமாக ஆக்கிவிட்டது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", என்ற அருள் மொழி பிறந்த தமிழகத்திலும் தொழில் பற்றிய பிரிவுகள் காலப்போக்கில் பிறவிபற்றிய பிரிவுகளாக இடம் பெற்றுவிட்டன; 'பிரமன் இவ்வாறு படைத்தான்' என்று நூல்களில் எழுதப்பட்டன. தண்ணீரும் உட்புக முடியாது அமைக்கப்பட்ட அறைகள் போல இச்சாதிகள் ஒன்றுக்கொன்று மயிரிழைப் பற்றமின்றித் தனித்து இயங்க விடப்பட்டன. இதனால் தமிழ்ச்சமுதாயம் பல்லாயிரக்கணக்கான சாதிக்குழுக்களாகச் சின்னபின்னப் படுத்தப்பட்டது. முழு மனித உடல் பல்லாயிரம் கூறுகளாக வெட்டப்படின் எத்தகைய கோரக் காட்சியை நல்குமோ, அதுபோலத் தமிழ்ச் சமுதாயமும் எண்ணிறந்த பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டு மனிதப் பண்பை இழந்து விட்டது. எண்ணிறந்த கீழ்ச்சாதிகள் ஏற்பட்டன. 'இவர்க்கு இவர் பணிய வேண்டும், ஏவல் கேட்கவேண்டும்', என்பன நூல்களில் எழுதிவைக்கப் பட்டன. நடைமுறையிலும் இவை கையாளப்பட்டன. இவற்றால் சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்ச் சமுதாயம் இயற்கை வலியை இழக்கத் தொடங்கியது. சாதிகள் தோன்றலைக் கண்டு உளம் வருந்திய திருநாவுக்கரசர், "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளார்" என்று அழுத்தந் திருத்தமாக அறையலாயினர். இவ்வாறு ஆழ்வார்களும் சாதிப்பிரிவுகளைக் கண்டித்தனர்; பக்தி ஒன்றுக்கே மதிப்பும் கொடுத்தனர்.

ஆயினும், நாயன்மார் ஆழ்வார் மறைவுக்குப்பிறகு சாதிகள் வேரூன்றிவிட்டன. கடல் கடந்த நாடுகளை வென்று அடிப்படுத்திய சோழர்கள் காலத்திற்றான் இப்பாழான சாதிகள் சமுதாயத்தின் உயிர்நாடியைச் சிதைத்துவிட்டன. மன்னனுடைய கோலுக்கும் வேலுக்கும் முன்புறத்தோற்றத்தில் சமுதாயம் ஒன்றுபட்டதாகக் காணப்பட்டது. ஆனால் உள்ளீடாகச் சமுதாய இருதய துடிப்பின் வேகம் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. சமுதாயத்தில் பிறவியினாலும் தொழிலாலும் தாழ்த்தப்பட்டும், ஒடுக்கப்பட்டும்,

நசுக்கப்பட்டும் வளமற்ற வாழ்க்கையுடன் துடிதுடித்துக்கொண்டிருந்த மக்களிடையே ஒன்றுபட்ட சமுதாய உணர்ச்சி எங்ஙனம் தலைகாட்ட முடியும்? இந்த அவல நிலையே படை எடுத்து வந்தவர்க்கு எல்லாம் தமிழகத்தைப்பணியவைத்தது என்று கூறுதல் தவறாகாது. ஒற்றுமை இழந்த சமுதாயம் எங்ஙனம் தன் மானத்தோடு வாழ இயலும்? மனிதப்பண்பை இழந்த சமுதாயம் வந்தவர்க்கு அடி பணிந்தது. சங்ககாலத்தில் மோரியர் படையெடுப்பை முறியடித்த தமிழ்ச் சமுதாயம் ஆயிரம் ஆண்டுகட்குப்பிறகு சாதாரண படையெடுப்புகளையும் எதிர்த்து நிற்க முடியவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஒற்றுமையற்ற சமுதாயத்தில் அன்பு தலைகாட்ட இடமில்லை. அன்பு வளர்ச்சியின் முடிவே அருளாதலால், அருள் தோன்றவும் இடமில்லை.

அருட் பெரியார்

இங்ஙனம் சமுதாயத்தில் அன்புக்கும் அருளுக்கும் இடமின்றி இருத்தலைக்கண்ட சித்தர்கள் இதற்குரிய காரணத்தை ஆய்ந்தார்கள். சாதிவேறுபாடுகளே காரணம் என்பதைக் கண்டார்கள். அவற்றின் சார்பாகத் தோன்றிய மூடப் பழக்கவழக்கங்களும் மக்களை மாக்களாக மாற்றியதையும் அறிந்தார்கள். இவற்றால் உளம் நொந்த அப் பெரியார்கள்,

"ஆண்சாதி பெண்சாதி ஆக இருசாதி
வீண்சாதி மற்ற எல்லாம்—குதம்பாய்
வீண்சாதி மற்ற எல்லாம்"

என்று சமுதாயத்திலிருந்த சாதிவேறுபாடுகளைக் கடிந்தனர். உள்ளத்தில் கள்ளமில்லாத கடவுளன்பே உயர்ந்தது. அத்தகைய அன்பு இல்லாமல்,

"காசி ராமேஸ்வரம் கால்நோவச் சென்றாலும்
ஈசனைக் காணுவையோ?—குதம்பாய்!
ஈசனைக் காணுவையோ?"

"உள்ளங்கால் வெள்ளெலும் பாகத் திரிபினும்
வள்ளலைக் காணுவையோ?—குதம்பாய்!
வள்ளலைக் காணுவையோ?"

என்று கடிந்தனர்.

இராமலிங்க அடிகள்

கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளும் இத்தவறுகளைக் கண்டார்; உள்ளம் வெதும்பினார்; அன்பு, அருள் என்னும் இரண்டும் சமுதாயத்தில் மலர்ச்சி பெறுமைக்குச் சாதிகளும் மதப்பூசல்களும் சமயப்போராட்டங்களும் காரணம் என்பதை உணர்ந்தார். இவற்றை ஊக்கியவை சாத்திர நூல்கள் என்பதையும் அறிந்தார்; சாதிவேறுபாடுகளைக் கற்பிக்கும் மநுதர்ம சாத்திரம் போன்றவற்றால்தான் சமுதாயம் சீரழிந்தது என்பதை நன்குணர்ந்தார்; மதவெறியினால் மக்கள் மாறுபட்டு ஒருவரையொருவர் அழித்துக்கொண்டதை வரலாற்று வாயிலாக அறிந்தார்; ஒரேமதத்தைச் சார்ந்த பலசமயங்கள் ஒன்றோடொன்று பூசலிட்டு மடிந்ததையும் உணர்ந்தார். அவரது அருள் உள்ளம் அருள் மொழியைக் கீழ் வருமாறு பொழிந்தது.

(1) "சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்;
சாத்திரக் குப்பையும் தவிர்ந்தேன்"

(2) "சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அழிந்தழிந்து வீணேநீர் அழிதல் அழகலவே."

இப்பொன்னுரைகளைத் தான் பின்வந்த விவேகானந்தரும் காந்தியடிகளும் பாரதியாரும் மேலும்மேலும் வற்புறுத்தி மறைந்தனர். ஆனால், எதனையும் எண்ணிப்பார்த்து அறநெறியில் செல்ல மக்கள் விடுதலைபெற்றால்தான், இதுகாறும் கூறப்பெற்ற ஆபாசங்கள் ஒழியும்; மக்கள் வாழ்வில் அன்பும் அருளும் அரும்பி மலரும்.

இயற்கையும் கவிஞரும்

:(-:0:-):

திரு. சுப. அண்ணாமலை, B. O. L. (Hons) தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

கவிதையுலகில் நுழைகின்றவரும் ஆங்குக் கவின்பெறத்திகழும் இயற்கை வருணனைகளைக் காணாதிருக்க இயலாது. கவிதை பாடும் கவிஞர்க்கு இன்றியமையாத திறமைகள் பலவற்றுள் முதன்மையானவை பொருள்களைக் கூர்ந்து நோக்கும் திறமையும் அவற்றை உள்ளவாறு வருணிக்கும் திறமையும் ஆகும் என்பது ஆங்கிலப் புலவராகிய திரு, வேட்ஸ்வொர்த் என்பாரின் கருத்து. பொருள்களைக் கூர்ந்து நோக்கும் திறமையை இயல்பாகப் பெற்றிருக்கும் கவிஞர்களின் உள்ளத்தைக் காணுந்தோறும் இன்பம் நல்கும் இயற்கைக் காட்சிகள் கவருவதில் வியப்பில்லையன்றோ? உலகில்உள்ள எல்லாமனிதர்களும் இயற்கையைக் கண்டுகொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால் அதில்உறையும் அழகு எல்லோருக்கும் புலனாவதில்லை; கலைஞர்களுக்கு மட்டுமே புலனாகின்றது. அவர்களிடம் உள்ள கலைப்பண்பே அதற்குக் காரணம், கவிஞர்களின் கவிதைகளில் உள்ள இயற்கை வருணனை நாம் நேரில்காணும் இயற்கையைவிட அழகாக விளங்குகின்றது. முடிவில்லாததாயும் தெளிவற்றதாயும் தோன்றுகின்ற இயற்கை, கவிஞர்களின் நெஞ்சக்களரியில் தோய்ந்து வெளிப்படும்போது புதுப்பொலிவுடனும் புதுப்பொருளுடனும் ஒரு வரையறையினுள் அடங்கித் திகழுகின்றது; கற்பவர் உள்ளங்களில் எழுச்சியும் இன்பமும் ஊட்டுகின்றது; அறங்களையும் உண்மைகளையும் தெளிவுறக் கற்பிக்கின்றது. நேரிற்காணும் இயற்கை, காணும் நேரத்தில் மட்டும் இன்பம் ஊட்டவல்லதேயன்றிக் கவிதைபோலச் செல்லுமிடந்தோறும் உடன்வந்து நினைவில் நிலைத்து எண்ணுந்தோறும் இனிமை பயப்பதில்லை. மாத்யூ ஆர்னால்டு (Mathew Arnold) என்னும் ஆங்கிலக் கவிஞர்,

"மலையே, கடலே, நீங்கள் எல்லாம் அழகாக விளங்குகிறீர்களா, அல்லது கவிஞர்கள் உங்களைத் தீட்டியுள்ள சொல்லோவியங்கள் அழகுற விளங்குகின்றனவா? என்று இயற்கையைநோக்கி வினவும் முறையில் ஒருபாடல் இயற்றியுள்ளார். உலகெங்கும்மங்கித்தோன்றும் இயற்கை மாண்புமிக்க கருத்துக்கள் பொங்கித் ததும்பும் ஊற்றாகக் கவிஞர்களின் பாடல்களில் மாறிநின்று அறிவுடையார்க்கு இன்பம் செய்வதை நாம் காண்கின்றோம்.

ஈராயிரம் ஆண்டுகட்குமுன் நம் தமிழகத்தில் வாழ்ந்த சங்கப் புலவர்கள் தமது கவிதைகளில் இயற்கைக்குச் சிறப்பான இடம் தந்திருக்கிறார்கள். மேலைநாட்டு ஆங்கிலக் கவிவாணர்கள் இயற்கையை வருணித்துள்ள முறைக்கும் சங்கத்துச் சான்றோர் அதனைச் சித்திரிப்பதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. வேட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் இயற்கை ஒன்றையே பொருளாக (theme) வைத்துப் பாடல்கள் செய்துள்ளார். எடுத்துக்காட்டாக அவரது 'Night piece', 'Yew trees', 'To a skyhark' ஆகிய பாடல்களைக் காணலாம். சங்கத்துச் சான்றோர்களோ, இயற்கையையும் மனிதவாழ்க்கையையும் தொடர்புபடுத்தியே கவிதை செய்தார்கள். தனியாக இயற்கையை மட்டும் வருணிக்கும் ஒரு பாடலைக் கூடச் சங்க இலக்கியத்தில் காணமுடியாது. இயற்கையையும் மனித வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பலஉண்மைகளைக் கண்டவர்கள் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்கத் தமிழ்க் கவிஞர்களே. ஆங்கிலப் புலவர்கள் இயற்கையைக் கூர்ந்து நோக்கி அதினின்றும் பலநீதிகளையும் அறங்களையும் தெரிந்துகொண்டார்கள்; இயற்கையில் தோன்றும் மிக அற்பமான பொருளும் அவர்கட்கு உயர்தரமான இன்பத்தை நல்கியது. ("That from everything I saw I could some instruction draw and raise pleasure to the height, through the meanest object's sight"-G Wither) ஆனால் அறிவும் மனஉணர்ச்சிகளும் படைத்த மனிதவாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாக இயற்கையை அவர்கள் காணவில்லை. இது தமிழ்க்கவிஞர்க்கு மட்டுமே வாய்த்த தனிச் சிறப்பு.

கவிதை பாடுதற்கெனத் தமிழ்ச் சான்றோர் வகுத்துக் கொண்ட புலனெறிவழக்கம் இயற்கையை முதற்பொருள், கருப்பொருள் ஆகிய இரண்டனுள் அடக்கி, மனிதவாழ்க்கையை உரிப்பொருளில் அமைக்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களும், பருவங்கள் ஆறும் காலை, மாலை, இரவு முதலிய சிறு பொழுதுகள் ஆறும் முதற்பொருள் எனப்படும். ஐவகை நிலங்களில் உள்ள பறவை விலங்குகளும் மனிதரும் அவரைச் சார்ந்த அனைத்துப் பொருள்களும் செய்திகளும் கருப்பொருள் எனப்படும். உரிப்பொருள் என்பது வாழ்க்கையில் நிகழும் ஒழுக்கம். ஒவ்வொரு வகை நிலத்திற்கும் ஓர் ஒழுக்கம் சிறந்ததாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலத்திற்கும் சிறந்த பருவங்களுள் சிறு பொழுதுகளும் வகுக்கப் பட்டுள்ளன. தமிழகத்து மக்களின் அகமும் புறமும் ஆகிய வாழ்க்கை ஒழுக்கங்கள் அனைத்தும் இப் பாகுபாட்டில் அடங்கி விடுகின்றன. இத்துணை அருமையான வரையறையை வேறுஎந்த மொழியிலும் காண்டல் அரிதாகும். சங்கப்புலவர்கள் அனைவரும் இவ் வரையறைக்கு உட்பட்டே இயற்கையை வருணித்துள்ளார்கள்.

கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை சங்க இலக்கியங்களுள் ஒன்று. அந் நூலில் ஒரு கவிதை மாலைக் காலத்தை மிகவும் அழகாகவும் கற்போர் உள்ளம் கனியும்படியாகவும் வருணிக்கும் காட்சியை உடையது. மேற்குறித்த புலனெறி வழக்கத்தின்படி இம் மாலைக்கால வருணனை ஓர் இளம் பெண்ணின் வாழ்க்கையோடு தொடர்புடையதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இவ் வருணனை நிகழுமிடம் கடலும் கடல்சார்ந்த இடமும் ஆகிய நெய்தல் நிலம்.

ஈண்டுக் குறிக்கப்பட்ட இளமங்கையின் வாழ்க்கைச்சூழலை நன்கு அறிந்தாற்றான் கவிதையில் காணும் இயற்கை வருணனையைச் சுவைக்க இயலும்.

அன்பு பெருக்கி அறவழியில் வாழ்ந்துவந்தது ஒருகுடும்பம். அக் குடும்பத்தில் ஓர் ஆடவனும் அவன் மனைவியுமாக இருவரே இருந்தனர். அவர்கள் இருவரும் இளவயதினர். இனிய பண்பினர். ஒரு

வரை யொருவர் களவில்கூடிக் காதலித்துப் பிறகு திருமணம் செய்து கொண்டவர்கள். அவர்களது இல்லறம் இன்பமாக நடை பெற்றது. குடும்பத்தலைவனாக இருக்கும் ஒருவன் எப்பொழுதும் வீட்டிலேயே தங்கித் துணைவியுடன் மகிழ இயலாதன்றோ? இல்லறம் நடத்துதற்குரிய பொருளைத் தேடிச் சேர்க்கும் இன்றியமையாத கடமைக்காக இத் தலைவன் வெளியூர்க்குச் செல்ல நேரிட்டது. பழந் தமிழர்கள் வாணிபத்தில் நிறையப் பொருளீட்ட விரும்பினால் வடநாட்டிற்குத்தான் செல்வர். இத் தலைவனும் தன் அருமை மனைவியிடம் பிரியா விடைபெற்று வணிகர் கூட்டத்தோடு வடநாட்டிற்குப் பயணமானான். நாட்கள் ஓடின, மாதங்கள் உருண்டன. இளவேனிற்காலத்தில் திரும்பிவருவதாக உறுதிகூறிப் பிரிந்த தலைவன், அப் பருவம் தொடங்கிய பின்பும் வரவில்லை. அவனது பிரிவு தலைவியை மிகவும் வருத்தியது. அன்புடைய காதலர்க்குப் பிரிவினைவிடக் கொடியநோய் வேறு ஒன்றும் இல்லை. "நின்பிரிவினும் சுடுமோ பெருங்காடு?" என இராமனை வினவிய சீதையின் பேச்சு ஈண்டு நினைக்கத்தக்கது. தலைவனது பிரிவால் உண்டான துன்பத்தைப் பகற்காலத்தில் ஒருவாறு மறந்திருக்கும் தலைவி மாலை நேரம் வரும்பொழுது ஆற்றொணாத் துன்பமுறுகிறாள். மாலை நேரத்தில் சிறிதுசிறிதாக மண்டும் இருளும், வானத்தில் ஒளி வீசும் வெண்ணிலவும், இணை இணையாக உலவும் காதலரின் காட்சியும் ஓவென முழங்கும் கடலலைகளின் ஒலியும், கூடுநோக்கிப் பரந்துசெல்லும் புள்ளினங்களும் அவளது துயரத்தை மிகுதிப்படுத்துகின்றன. கூடியிருக்கும் காதலர்க்குக் கொள்ளையின்பம் நல்கும் மாலை நேரம் பிரிந்திருப்போர்க்குப் பெருந் துன்பத்தை விளைவிக்கின்றது. இணைந்திருந்த இன்பம்ஊட்டும் தலைவனால் தனியே விடப்பட்ட தலைவி மாலைநேரத்தைத் தன்னைக் கொல்லவந்த கூற்றமாகவே கருதுகின்றாள். அந்திப்பொழுதில் பகலவன் மலைவாயில் வீழ்ந்ததையும், இருள் உலகைக் கவ்விக்கொள்வதையும் மரங்களின் இலைகள் எல்லாம் பொலிவிழந்து, குவிந்து நிற்பதையும், செக்கர் வானத்தில் பிறைமதிதோன்றுவதையும் துயரமொழிகளால் வருணிக்கின்றாள். தனக்குக் கொடுமை விளைப்பது நீதியோ என மாலையை நோக்கி வினவுகின்றாள்,

தலைவியாக இருந்து மாலைநேரத்தைச் சித்திரிக்கும் புலவர் இங்கு மனித உள்ளங்களை அழகுறக் காட்டுகிறார். இயற்கையில் உறையும் அழகைவிட மனிதஉள்ளங்களே புலவர்களின் மனத்தை அதிகமாகக் கவரவல்லவை. ஆங்கிலக்கவிஞன் வேட்ஸ்வொர்த் இயற்கையைப் பலகவிதைகளால் பாடியபிறகு மனிதஉள்ளங்களைப்பாட விழைந்தான்; ("Here might I pause and bend in reverence, to nature and the power of human minds; of these said I shall be my song; of these, if future years mature me for the task, Will I record the praises") மனித உள்ளங்களின் ஆழத்தையும் ஆற்றலையும் பாடத் தன்மனம் இன்னும் பண்பட வேண்டும் என எண்ணினான். நம் தமிழ்ப்புலவரோ எனில் இயற்கையையும் மனிதஉள்ளத்தையும் ஒப்பிட்டே கவிதை பாடிவிட்டார்.

இனி, இக்கவிதையில்வரும் தலைவி பேசும் பேச்சைக் கேட்போம்; "அருள்உணர்வு இன்றி அறிவுமட்டும் கூர்மையாக வளர்ந்துவிட்ட காரணத்தால், அறம்செய்ய வேண்டும் என்னும் எண்ணமே இல்லாதவனையும் பண்பும் ஒழுக்கமும் இல்லாதவனையும் வாழ்ந்து தன்னைக் கண்டாலே எல்லோரும் அஞ்சி நடுங்கும்படி தீயசெயல்களையே எப்போதும் செய்பவனுடைய நெஞ்சத்தில் எவ்வாறு இருள்மண்டிக் கிடக்குமோ அவ்வாறு உலகஇருள் மெல்லமெல்லக் கவ்விககொள்ளும்படியாகவும், தனித்திருப்போரது நெஞ்சில் தனிமை உணர்ச்சி பெரும் பாரமாக நின்று அழுத்தும்படியாகவும் பகலவன் மலைவாயில் வீழ்ந்து மறைந்தான். வறுமை மிகுதிப்பட்டதால் தனது பெருமை வலிமை எல்லாம் குன்றி, ஒருவனிடம் சென்று பல் எல்லாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டி இரப்பவனுடைய நெஞ்சம் எவ்வாறு பொலிவு இழந்து, சோர்ந்து இருக்குமோ அவ்வாறு மரங்கள் எல்லாம் பொலிவற்று வாடிநிற்கின்றன. தன்னிடம் உதவிகேட்க வருபவரைக் கண்டு இருந்த இடத்தை விட்டு எழுந்து சென்று மறைபவனுடைய நெஞ்சத்தைப் போல மரங்களின் இலைகள் எல்லாம் குவித்துகொண்டு விட்டன. ஊழிமுடிவுக் காலத்தில உலகனைத்தையும ஒருசேர உண்ப

தற்காக வந்துநிற்கும் கூற்றுவன் வாய்திறந்து பெருஞ்சிரிப்புச் சிரிப்பது போலச் செக்கர் வானத்தில் தோன்றும் பிறைச் சந்திரனாகிய கோரப் பல்லைக்காட்டி, இந்த மாலைநேரம் நான் அஞ்சி நடுங்கும்படியாகச் சிரிக்கின்றது.

“அருள்தீர்ந்த காட்சியான் அறன்நோக்கான் நயம்செய்யான்
வெருவுற உய்த்தவன் நெஞ்சம்போல் பையய
இருள்தூர்பு புலம்பூரக் கனைசுடர் கல்சேர
உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையால் ஒருவனை
இரப்பவன் நெஞ்சம்போல் புல்லென்று புறம்மாறிக்
கரப்பவன் நெஞ்சம்போல் மரமெல்லாம் இலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருள் பிறைநுதி எயிறாக
நாற்றிசையும் நடுக்குறூஉம் மடங்கற் காலைக்
கூற்று நக்கதுபோலும் உட்குவரு கடுமாலை”

நாம் காணத் தினந்தோறும் வந்து மறையும் மாலைநேரம் துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் இம் மங்கைக்கு—மங்கையாக நின்று பாடும் கவிஞர்க்கு—எத்தகைய கொடியகாட்சி வழங்குகின்றது பார்த்தீர்களா? இருள் கவிதல், மரங்கள் வாடி நிற்றல், இலைகள் குவிதல் ஆகிய மூன்றுக்கும் மூன்றுவகை மனித உள்ளங்களை உவமை கூறியது எத்துணைப் பொருத்தமாக அமைந்திருக்கின்றது!

இனி, இத்தகைய கொடிய மாலைநேரத்தை விளித்துத் தலைவி கூறுவதைக் கேளுங்கள்:

மாலையே! என் நெஞ்சையும் தன்னுடன்கொண்டு பிரிந்துசென்றவர் மீண்டுவந்து, துணையாக நின்று அன்பு செய்யவில்லையே என்று நான் வருந்தும் இந்தவேளையில், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கரையேற முடியாமல் தவிக்கும் மான் ஒன்றின் மார்பை நோக்கி அம்பு தொடுக்கும் கொடியவனைப் போல, என்னை மேலும் உணர்வழியச் செய்யத்தான் நீ வந்தாயோ?

“மாலைநீ, உள்ளம்கொண் டகன்றவர் துணைதாராப் பொழுதின்கண்
வெள்ளமான் நிறம்நோக்கிக் கணைதொடுக்கும் கொடியான்போல்
அல்லற்பட் டிருந்தாரை அயாடபிய வந்தாயோ”

“இரக்கம் சிறிதும் இல்லாத காதலர் என்னைப் பிரிந்திருக்கும் காலத்தை நீ எதிர்பார்த்திருந்தாய் போலும்! பகைவரோடு செய்த

போரில் தோல்வியுற்று மனம் குன்றியிருப்பவரிடம் சென்று அவர் தோல்வி அடைந்ததை எடுத்துக்காட்டி இகழ்ந்து சிரிப்பவர்போல, தலைவனின் பிரிவால் எனக்கு ஏற்பட்டுள்ள மனநோயை மிகுதியாக்கத் தான் நீ வந்தாயோ?"

"மாலைநீ, ஈரமில் காதலர் இகந்துஅருளா இடம்நோக்கிப்
போர்தொலைந்து இருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போல
ஆர்அஞர் உற்றாரை அணங்கிய வந்தாயோ".

"எனக்குப் பற்றுக்கோடாக நின்று அன்பு செய்யவேண்டிய காதலர் என் நோயை நீக்குதற்கு வாராத இக்காலத்தில் உடம்பைச் சுட்டெரிக்கும் வேட்கைநோயால் வருந்தும் என் முன்னே நின்று, வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுபவனைப்போல என் அறிவைக் கலக்கிப் பித்தாக அடிக்கத்தான் நீ வந்தாயோ?"

"மாலைநீ,கந்துஆதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல்
காயந்தநோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ"-கலித்தொகை 120

இவைதாம் தலைவிகூறிய துயரமொழிகள். மாலைநேரம் தனக்குச் செய்யும் கொடுமையை மூன்று உவமைகளால் அவள் விளக்குகிறாள். முதல் உவமை, அவளது உயிரைக்கொல்லும் கூற்றுவன்போல் மாலைநேரம் விளங்குவதையும் இரண்டாவது உவமை, அவளது மனநோய் மாலைநேரத்தால் மிகுதிப்படுவதையும், மூன்றாவதுஉவமை தலைவனது பிரிவு தீயைப்போல நின்று அவளைச் சுடுவதையும் மாலை தனது காட்சியால் அவளைச் சித்திரவதை செய்வதையும குறிப்பாகப் புலப்படுத்துகின்றன. இந்நயமும், உவமைகளாகவரும் மூன்று செயல்களும் கொடுமையில் ஒன்றுக்கொன்று படிப்படியாக விஞ்சி நிற்கும் அழகும் எண்ணியெண்ணி இன்புறத்தக்கன. இக்கவியை இயற்றியவர் நல்லந்துவனார் என்னும் கவிஞர் ஆவார்.

இயற்கையை மனித வாழ்க்கையோடு பிணைத்து அழகுறச் சித்திரிக்கும் கவிதைகள் ஏனைய சங்க இலக்கியங்களிற் போலக் கலித்தொகையிலும் நிரம்பவுள்ளன. கவிச்சுவை பருக விரும்புவோர் அவற்றைக் கற்று இன்பம் நுகர்வாராக.

உயிர்ப்பொருள் பேணல்

சாமுவேல் ஆபிரகாம் B. A; B. Sc. (Hons.) L. T. விலங்கியல் துறைப் பேராசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

(62–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னொரு வழியிலும் வனவிலங்குகளுக்கு மக்கள் இன்னல் இழைக்கின்றனர். மிருகக்காட்சிநிலைய அதிகாரிகள் தங்கள் தேவைக்கும் அதிகமான விலங்குகளைப் பிடிக்க முயல்கின்றனர். ஹென்றிஷ் ஓபர்யான் (Henrich Oberjahnn) என்ற ஜெர்மன் வேட்டைக்காரன் ஐரோப்பாவிலுள்ள அநேக மிருகக்காட்சி நிலையங்கள், விலங்கு விளையாட்டுக் குழுவினர் (Circus Companies) முதலியவர்களுக்கு மிருகங்கள் அனுப்புவதாக ஓர் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டான். அவன் ஆபிரிக்காவிலுள்ள லேக்சாட் என்ற பகுதிக்கு அகன்றான். நான்காண்டுகள் நிறைவதற்குள் இருநூறு யானைகள் உள்ள கூட்டத்தை ஐம்பது களிறுகள் உள்ள நிரையாகக் குறைத்து விட்டான் அக் கொடும்பாவி. குரூரம் அதோடு குறையவில்லை. பத்தொன்பது பச்சிளங்குட்டிகளைப் பிடிகளினின்று பிரித்து வளர்க்க அரும்பாடு பட்டான். அந்தோ! அவைஎல்லாம் இறந்தன. பின்னும் இக்கொடிய வீரன் யானைக்குட்டிகளுக்கு மனிதவாடை பேற்றி அக் கன்றுகளைக் கரேணுகள் ஏற்றுக்கொள்ளுமா என்று கண்டறிய அவற்றைத் தத்தம் பிடிகளிடத்தில் அனுப்ப, அப்பிடிகள் மனித நாற்றம் ஏற்றப்பட்ட குட்டிகளை மிதித்துக் கொன்றன. ஆகா, என்ன ஆராய்ச்சி!

நாகரிகம் என்னும் நீர்ச்சுழியில் அகப்பட்டுத் தவிக்கும் மேனாட்டு நாரியர் குளிர்காலத்தில் கழுத்தையும் தலையையும் கைகளையும் மூட மயிர்த்தோல் உறை வேண்டுமென்கின்றனர். இதனால் கொல்லப்பட்ட வெண்ணரிகள், சீல் (Seals) கள், ஸேபில் (Sable) கள் எண்ணிறந்தன. நம் நாட்டில் புலி, சிறுத்தை, புள்ளிமான் படும்பாடு

சொல்லிமுடியாது. சில ஆண்டுகட்கு முன்னர், பிராணிநூல் மாணவர்கள் காரைக்கால் சென்றிருக்கும்போது ஆண்டு ஓர் கடையில் சிறுத்தைத் தோற்குவியல்களைக் கண்டனர்; கழிவிரக்கம் கொண்டனர். ஆண்டுதோறும் ஒவ்வொரு கம்பெனியும் (அப்போது காரைக்காலில் மாத்திரம் மூன்று இருந்தன) சுமார் ஈராயிரம் தோல்களை இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றதென்பதைக் கேட்டு மனமாழ்கினர். கற்றைக்குழல் பார்வதிக்குப் பாம்பு கங்கணமானால் தற்காலக் கருங்குழற் பாவையருக்கு அதன்தோல் பையாகின்றது. இதனால் மறைந்தன மலைப்பாம்புகள். விரியனுக்கும் நாகத்திற்கும் இதே வினை பிடித்துள்ளது.

உயிர்நூல் ஆராய்ச்சியாளர்களும் தங்கள் ஆராய்ச்சிக்கு வேண்டிய அளவுக்கு அதிகமான உயிரினங்களை எடுத்துச் செல்கின்றபடியால் சில பிராணிகள் தற்போது கிடைப்பது அரிதாகிவிட்டது. உதாரணமாக, பாம்பன் பக்கத்திலுள்ள குருசடித்தீவில் சிறிதுகாலத்திற்குமுன் நத்தைகளும், கடற்சாமந்திகளும் (Sea Anemone) எளிதில் கிடைத்தன. தற்போது அவை அரிய பொருளாகிவிட்டன.

இறகு வியாபாரிகளும் அரிய பறவை முட்டைகளை விற்பவர்களும் பறவைகளுக்குக் கொடுக்கும் தொல்லைகளுக்கு ஓர் எல்லையில்லை. நம் நாட்டில் கருவாய்மூஞ்சிக்கொக்கும், ஃபெசன்ற் (Pheasant) என்ற பறவையும், மற்ற நாடுகளில் நெருப்புக்கோழியும், அழகிய இறகுகளுக்காக ஆயிரக்கணக்கில் அழிக்கப்படுகின்றன. நியுஜீலந்துப் பாதிப்பல்லி பாதிமுதலைஉருவமுள்ள ஸ்ஃபீனோடான் (Sphenodon) என்ற பிராணி மனிதன் இழைத்த இன்னல்களால் எண்ணிக்கையில் குறைந்து மறைந்து போகக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. தற்போது அப்பிராணிக்குச் சட்டபூர்வமாய்ப் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது.

புதுநாடுகள் கண்டோர் அந்நாடுகளில் இருந்த புட்களுக்கும் பிறவிலங்குகட்கும் புரிந்த கொடுமைகள் பகரற்பாலனவல்ல. கி. பி. 1589-ல்தான் டோடோ (Dodo) என்னும் பறக்கவியலாப்பறவை

மொரிஷியஸ்தீவில் டச்சுக்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் பரிதாபம்! அக்கொடியவர்கள் அத்தீவில் கால்வைத்த நூற்றாண்டுகளில் டோடோ அறவே ஒழிந்தது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளில் மனிதனால் துன்புறுத்தப்பட்டு சுமார் 77 வித பாலூட்டிகள் மறைந்தனவென்று ஃபிரான்சிஸ் ஹார்பர் (Francis Harper) கூறுகிறார்; முக்கியமாக, கடந்த நூற்றைம்பது ஆண்டுகளிற்றான் மேற்சொன்ன மிருகங்கள் மிகக்கடிது மறைந்தனவென்கிறார்.

இரண்டாவது உலகப்போரின்போது விலங்குகளுக்குண்டான இடர்களையும் இன்னல்களையும் இயம்பவியலாது. சேனைகள் காடுகளிற் போரிட்டன. தோற்ற அணிகள் பின்வாங்கியபோது காடுகளை அழித்து எரித்துச் சென்றன. அக்காடுகளிலிருந்த வனவிலங்குகள் என்னவாயின! பல்வகை மிருகங்களும் பறவைகளும் மடிந்தொழிந்தன. மலேயா, பர்மா முதலிய நாடுகள்தான் இத்தீச்செயல்களுக்கு இலக்காயின.

நம் நாட்டில் நாடோறும் சுமார் பதினோராயிரம் பச்சிளங்குழந்தைகள் பிறந்து மக்கள் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன. ஆகையால் உணவு உற்பத்திக்காகவும் உறைவிடத்திற்காகவும் காடுகொன்று நாடாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. சான்றாக வயநாட்டுப் பகுதியைக் கூறலாம். பின்னும் காப்பி, தேயிலை முதலிய பயிர்களைச் சாகுபடிசெய்ய மலைப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பிலுள்ள காடுகள் அகற்றப்பட்டன. இதனால் அவண் முன்னர் உறைந்த வனவிலங்குகள் வேறிடத்திற்குச் செல்லவேண்டியுள்ளது. தங்களுக்கு இயற்கையாய் அமைந்துள்ள செடிகொடிகளான இருப்பிடமும் இரையும் இல்லாமையால் இடம்பெயர்ந்த வன விலங்குகள் இயம்பொண்ணு இன்னல்களுக்கு இலக்காகின்றன. இதற்கிடையில் ஆண்டுக் குடியேறிய மக்கள் துப்பாக்கிகளாலும் வேறுகருவிகளாலும் நிலையிழந்து வலியிழந்து நிற்கும் அவ்வன விலங்குகளை வதைத்துக் கொன்றுவிடுகின்றனர். இவ்விதமாய் மறையும் விலங்குகளில் ஒன்று வெளிமான் (Black buck). இப் புல்வாய் ஒழியவே, அதைக்கொன்று தின்னும் கடுவாயும் குறிப்பாகச் சிறுத்தைப் புலியும் பசியால் நலிந்து நசிக்கின்றன. நாற்கொம்பு மானும்

(Tetraceros) இதே கதிக்குள்ளான இன்னொரு வனவிலங்கு. சில சமயங்களில் ஆடுகளையும் (முக்கியமாக வெள்ளாடுகள்) மாடுகளையும் காடுகளில் மேய்த்து மரங்களின் கீழுள்ள புதர்களையும் புற்களையும் அழித்து விடுகின்றனர். இதனால் தரையில் முட்டையிடுபவைகளான காடை, கௌதாரிகள், பாம்பு வகைகள் மிகக் கட்டழிகின்றன.

சில வனவிலங்குகளைப் பற்றிய மூடநம்பிக்கைகளும் அவற்றிற்குச் சாவுமணி அடித்தன. எடுத்துக்காட்டாகக் காண்டாமிருகத்தைப்பற்றி ஆராய்வோம். கடந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் மூவகையான காண்டாமிருகங்கள் இருந்தன. இருவகைக் காண்டாமிருகங்கள் இறந்தன. ஒருவகை மாத்திரம் எஞ்சியிருக்கின்றது. மூன்றாவது வகைக் காண்டாமிருகங்கள் கூட நாளடைவில் எண்ணிக்கையில் குறைந்தன. காரணம் என்னவோ? காண்டாமிருகத்தின் எட்டங்குல நீளமுள்ள கொம்பின் மதிப்பு ஈராயிர ரூபாயாகும். ஏனெனில் அக்கொம்பில் ஒரு குழியுண்டாக்கி அதில் நீரைவார்த்து வைத்தால் அந்நீர் ப்ளேக் என்னும் கொள்ளை நோய், சயம் இன்னும் அநேகவியாதிகட்குப் பன்னோய்ப்பரிகாரியாகக் கருதப்பட்டது. பாம்பு தீண்டிய இடத்தில், கொம்பின் சிறுபாகத்தைக் கடிவாயில் வைத்தால் விடம் இறங்கிவிடுமாம். ஆகையால் காண்டாமிருகங்கள் ஏராளமாய்க் கொல்லப்பட்டன. இம் மூடநம்பிக்கை ரோமாபுரியிலும் நிலவியதாகத் தெரிகிறது. சான்றாக, நரம்புகள் பற்றிய வியாதிகட்குப் பரிகாரமாக மார்ஸெல்லஸ் எம்பிரிகல் என்னும் ரோமபுரி மருத்துவர், காண்டாமிருகத்தின் குளம்பிலிருந்து செய்த ஒரு விரல்வளையத்தை அணிந்துகொள்ளவேண்டும் என்றார். ஏனெனில் அவ் வளையம் நரம்புகளில் ஏற்படும் தடையை விலக்கிவிடுமாம்! படிப்படியாகக் காண்டாமிருகங்கள் விரல்விட்டெண்ணக் கூடிய நிலைக்கு வந்துவிட்டன. தற்போது அவை பாதுகாக்கப்பட்டுள்ளன. கருங்குரங்கு லேகியத்தைப்பற்றி நாளிதழ்களில் அடிக்கடி நாம் விளம்பரங்களைப் பார்க்கலாம். கருங்குரங்கின் இறைச்சி ஓர் அருமருந்தெனப் பாமரமக்கள் அகத்தில் மருள் குடிகொண்டுள்ளது. ஆகையால் கருங்குரங்குகள் குறைந்து வருகின்றன. நீலகிரி வரையாடும் எண்ணிக்கையில் குறைபாடாக இருக்கிறது இவ்வித காரணத்தால்.

நமது கர்ன்உயிர்ச் செல்வம் கருவூலத்திலுள்ள ஒருசேமநிதியை நிகர்க்கும். ஆனல் அச்சேமநிதியில் உள்ள முதலைப் பெருக்குவதற்குப் பதிலாகக் குறைத்துவிட்டோம். ஏனெனில் மனிதனின் புன்னீர்மையால் அநேக புட்களும் பெரிய மிருகங்களும் கொல்லப்பட்டுப் பூண்டோடழிந்து புவியினின்று அறவே ஒழிந்தன. இப்போதிருக்கும் சிறிதளவான முதலையாவது போற்றிப்பாதுகாத்து நம் பின்சந்ததியார்களுக்கு வைத்துப் போவது நம் கடமையாகும். ஆகையால் வனவிலங்கு வெறுக்கையை இன்னும் குறைக்காது எங்ஙனம் பெருக்குவது அல்லது பாதுகாப்பது என்பதனைப்பற்றிப் பார்ப்போம்.

நேருஜியின் பஞ்சசீலங்கள் வனவிலங்குகளிடையேயும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். மக்கள் மாக்களிருப்பிடங்களின் எல்லை மீறிச் சென்று அவற்றைத் துன்புறுத்துவது நியாயமாகுமா? அல்லது அவற்றின் வாழ்க்கையில் தலையிடலாமா? அவைகளும் பயமின்றி வாழவேண்டாமா? ஆகையால் பன்னாட்டு அரசினர் தங்கள்நாடுகளில் வனவிலங்குகளுக்கு வாழ்வகங்கள் (Sanctuaries) அமைத்து அவற்றிற்கு அடைக்கலம் அளித்து அவற்றைப் புரக்கின்றனர். வனவிலங்குப்புக்கில் என்பது அதிகப்பரப்புள்ள ஒருகாட்டின் பகுதியே; அங்கு மிருகங்கள் சுயாதீனமாய்ச் சுற்றித்திரியும். அங்கு வன்கணாளராகிய வேட்டைக்காரர்கள் சென்று மிருகங்களைத் துன்புறுத்த முடியாது. உதாரணமாக உலகிலேயே மிகப்பெரிய வனவிலங்குப் புகலிடமாகிய குருகல் வனவிலங்ககத் (Krugel Park) தைப்பற்றி வினவுவோம். இது தென்ஆப்பிரிக்காவில் உள்ளது. எண்ணுயிரம் சதுர மைல் பரப்புள்ளது. காட்டிற்குள் மோட்டாரிற் செல்வதற்காகச் சுமார் ஆயிரம் மைல் நீளமான பாதையும் உண்டு. காட்டிற்குள் நுழையும்போது, காவலாளர்கள் காடுகாண்போரிடமுள்ள துப்பாக்கிகளை எடுத்து உறைகளிற் போட்டு முத்திரை வைத்துவிடுவர். காட்டின் நடுவில் நல்ல விடுதிகளும் உண்டு. காட்டினுள் செல்லும்போது குறிப்பிட்ட இடங்கள் தவிர, பிறவிடங்களில் தங்கள் காரைவிட்டு வெளியே வரக்கூடாது. காட்டினுள் செல்லும்போது சிங்கங்களும் ஒட்டகச்சிவிங்கிகளும் மற்ற வனவிலங்குகளும் மானிடரைச் சற்

றும் மதியாது, அவர்களுக்குப்பயப்படாமல் அங்குமிங்கும் சென்று கொண்டிருப்பதைக் காணலாம். நடுவழியில் காரை நிறுத்திவிட்டால் சிங்கங்கள் வந்து காரைச் சூழ்ந்துகொள்ளுமாம்; ஆனால் அவை உள்ளிருப்பவர்களுக்கு எவ்வித ஊறும் விளைவிப்பதில்லையாம். ஆங்குள்ள நீர் நிலைகளில் முதலைகளும் நீர் யானைகளும் பயமின்றி ஆனந்தமாய் நீந்துகின்றன. ஓராண்டில் ஏறக்குறைய சுமார் இரண்டரை லட்சம் மக்கள் இவ் வனவிலங்குப் புக்கில்லைக் காணப் போகிறார்கள். அவர்களிடமிருந்து சுமார் பதினொந்து லட்சம் சவரன்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. பெல்ஜியன் காங்கோவிலும் இன்னொரு வனவிலங்கு வாழ்வகமும் உண்டு.

நம் இந்திய அரசினரும் இத்துறையில் அதிகம் உழைத்துள்ளனர். புவியினின்று ஒழிந்துபோகக்கூடிய நிலையிலிருந்த ஒரு மிருக இனம் காண்டாமிருகம். புகலிடம் அளித்தால் எவ்வாறு மறுபடியும் பல்கிப் பெருகிப் பழைய நிலையையடைய முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, நம் இந்திய அரசினர் நிறுவிய கஜிரிங்கா வனவிலங்கு வாழ்வகமாகும். 1908-ம் ஆண்டில் அஸாமில் 10 அல்லது 12 காண்டாமிருகங்களே எஞ்சி, வேட்டைக்காரர்களுக்கு அஞ்சி, முடிவுகாலத்தை எதிர்நோக்கி யிருந்தன. அவ்வாண்டில் அவைகளுக்கு கஜிரிங்காப்பகுதியில் அடைக்கலம் அளிக்கப்பட்டது. தற்சமயத்தில் 200க்கும் அதிகமான காண்டாமிருகங்கள் அங்கு அல்லலின்றி அலைந்து திரிகின்றன. நம்நாட்டில் இன்னும் பலபுகலிடங்கள் உள்ளன. அஸாமில் ஆறு அடைக்கல ஆரண்யங்களும், உத்தரப்பிரதேசத்தில் நான்கும் உண்டு. தென்னிந்தியாவில் பண்டிப்பூர் முதுமலை, பெரியாறு புகலிடங்கள் உண்டு. பெரியாறு ஏரியில் படகில் அதிகாலையில் போனால் யானைக்கூட்டங்கள், மான்மரைகள் அச்சமின்றி அலைவதைக் கண்ணுறற் பருகிக் களிக்கலாம். சில சமயங்களில் புலி, சிறுத்தை முதலியவை நீர் பருகுவதையும் பார்க்கலாம். செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கலில் பறவைகட்குப் புகலிடம் தரப்பட்டுள்ளது.

வனவிலங்குப் பூங்காக்களிலும் (Zoological gardens), ஒழிந்து போகும் நிலையிலிருந்த சில வனவிலங்குகட்கு ஒதுக்கிடம் தரப்பட்டமையால் அவை இன்றும் உயிரோடுள்ளன. வனவிலங்குப் பூங்கா என்பது பெரியநகர்களில் அதிகப் பரப்புள்ள இடத்தில் அமைக்கப்பட்ட நந்தவனந் தான். அதில், ஆங்காங்கு வேலியாற் சூழப்பட்டு வனவிலங்குகள், ஏறக்குறைய இயற்கைச் சூழலில் வசிக்கின்றன. சென்னை, திருவனந்தபுரம், மைசூர் போன்ற இடங்களில் இவ் வகையான வனவிலங்குப் பூங்காக்கள் விளங்குகின்றன. முற்காலத்தில் ஐந்து அல்லது ஆறு கோடி காட்டெருமைகள் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலும் ஐரோப்பாவிலும் சுயேச்சையாய் அலைந்தன. ஆனால் தற்போது உலகத்தின் பல்வேறு வனவிலங்குப் பூங்காக்களில் காக்கப்பட்டு அவைகளில் மாத்திரம் வாழ்கின்றன. இவ்வாறாகவே ஆப்பிரிக்கமான்-வெள்வால்மான் (White Tailed Gnu) வனத்தில் அழிந்துபோய், வனவிலங்கு நந்தவனங்களில் மாத்திரம் இலங்குகின்றது. பீர் டேவிட் மான் (Peer David's deer) பழைய உலக மான்களினின்றும் அதிகம்வேறுபடுகிறது. அதன் முன்னைய இருப்பிடமாகிய வடசீனாவில் ஹொனான் பகுதியில் உள்ள சதுப்பு நிலங்களில், அது இன்று காணப்படுவதில்லை. ஏனெனில் ஆண்டு அழிந்தது பூண்டோடு. கடைசிப் பிணை பீக்கிங்கில் உள்ள முன்னாள் அரசவேட்டைச் சோலையில் 1920-ம் ஆண்டு இறந்தது. ஆனால் 1897-ம் ஆண்டு பெட்ஃபோர்ட் (Bed ford) பிரபுவால் மூன்று மான்கள் இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பட்டு ஆண்டு வோபர்ன் (Woburn) பூங்காவில் பாதுகாக்கப்பட்டன. அவை இன்று முந்நூறுக்கும் அதிகமான மான்கள்உள்ள மந்தையாக மிளிர்கின்றன. அங்கிருந்து அவை பற்பல விலங்குப் பூங்காக்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறாகவே ஹவாய்த் தீவின் பெரும் வாத்தும் காக்கப்பட்டுள்ளது. நம் நாட்டு கானல் மயில் (Great Indian Bustard) விலங்குப் பூங்காக்களில் பாதுகாக்கப்படாவிட்டால், அது சிறிதுகாலத்திற்குள் ஏட்டில் மாத்திரம் காணப்படுமேயொழிய, இயற்கையில் உயிருள்ள பறவையாகக் காணப்படாது.

பற்பல தேசங்கள் தம்முடைய வனவிலங்குகளைப் பாதுகாக்கச் சட்டமுமியற்றியுள்ளன. 1900-ம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் பிடியையோ அல்லது 30 பவுண்டு எடைக்கும் குறைந்த தந்தமுடைய களிற்றையோ சுடக்கூடாது என்று சட்டமியற்றியதின் பயனாகவும், குறிப்பிட்ட வேட்டைக்காரர்களுக்கு மாத்திரம் அனுமதி கொடுக்கும் முறை (License System) கடைப் பிடிக்கப்பட்டதனாலும் அங்குள்ள யானைகளின் எண்ணிக்கைக்குறைவு தடுக்கப்பட்டது. நம் அரசினரும் அநேக சட்டங்கள் இயற்றியுள்ளனர். இவ்வாறு சட்டமியற்றுவது நம்நாட்டிற்கு நவமன்று. ஈராயிரம் ஆண்டுகட்குமுன்னர் இந்தியாவை ஒருகுடைக்கீழ் ஆண்டவரும் அன்பும் அறனும் அருளும் அவதரித்தாற்போல் மாண்டவரும் ஆகிய அசோகர் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டங்களைப் பாறைகளிலும், கற்றூண்களிலும் எழுதுவித்தார். அவற்றில் ஐந்தாவது கற்றூண் சட்டம் (5th Pillar Edict) மிருகங்களைத் தொந்தரவு செய்வதையும் கொல்வதையும் தடுக்கிறது. மான்களையும் காண்டாமிருகங்களையும் ஆமை கிளி காடை முதலியவற்றையும் கொல்லக்கூடாது; மீன்களைப் பௌர்ணமி போன்ற தினங்களில் பிடிக்கவும் கூடாது, விற்கவும் கூடாது; என்றும் அச் சட்டம் வற்புறுத்துகின்றது. அசோகர் சொல்லோடு நிற்காமல் செயலிலும் சட்டங்களை நிறைவேற்றினர். ஏனெனில்

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்"

ஆகையால் தன் உணவுக்காக மயிலையும் மானையும் கொல்லக்கூடாது என்று உத்தரவிட்டதாக முதலாவது பாறைச் சட்டம் (RockEdict) பகர்கின்றது.

ஆனால் சட்டங்கள் என்னோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டனவென்று மக்களுக்குத் தெரிந்தாலல்லவா அவர்கள் சட்டத்தை மதித்து அதற்குக் கீழ்ப்படிவார்கள்? ஆகையால் வனவிலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், மக்கள் வனவிலங்குகளென்றால் எவையென்றும், அவைகளைத் துன்புறுத்தினால், அத் தீச்செயல்

எவ்வாறு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நம்மைப் பாதிக்கு மென்றும் அறிதல் அவசியமாகும். இருள் உலகைச்சூழும் மாலையிலே சிறுவன் ஒருவன் அங்குமிங்கும் தத்தித் திரிகின்ற சொறித் தவளையைப் பார்க்கின்றான்; உடனே கல்லொன்று எடுத்து அதன் மேல் எறிந்து, அப் பிராணி படும் அல்லலைக் கண்டு மனங் களிக்கின்றான். அச் சொறித்தவளைக்கும் வலியை உணரக்கூடிய நரம்புத் தொகுதி இருக்கிறதென்றும், அது மக்களுக்கு என்ன ஊழியம் உஞற்றுகிறதென்றும் பையன் உணர்ந்திருந்தால் அவன் வாயில்லாப் பிராணியை வதைக்கப் பின்வாங்குவான். திருப்பாற்கடலில் எழுந்த ஆலகாலவிடத்தைக் கறைமிடற்றன் அயின்று தேவர்களை எவ்வாறு காப்பாற்றினனோ அவ்வாறே, தீங்கறியாச் சொறித்தவளை பயிர்களைத் தின்று நாசமாக்கும் சுமார் 80 வகையானபூச்சிகளைப் பாங்காய் உண்டு விவசாயிக்கு உன்னதப் பணியாற்றும் ஓர் உயர்ந்த கர்மயோகி. இவ்வாறே தோட்டத்துப் பூச்சி புழுக்களைப் புசித்து நமக்காக நன்மை புரியும் ஓணானை இன்னாசெய்து ஒறுத்தல் மனிதப்பண்புக்கு எவ்வாறு ஒவ்வும்? புத்தர்மகான்பிறந்த நாட்டிலே, அவரது அடிச் சுவட்டில் நடந்த அசோகரும் காந்திபடிகளும் போன்ற உத்தமர்கள்உதித்த நம் பரதநாட்டிலே,

> "நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> கொல்லாமை சூழும் நெறி"

என்று நாயனார் நவின்ற நயமான வாக்கை எல்லோருக்கும் புகட்டுவது அவசியமாகின்றது.

ஆகையால், படித்தறிந்த மக்களுக்தும், பாமரமக்களுக்கும் பள்ளிப் பிள்ளைகளுக்கும் நமது சூழலில் உள்ள தாவரங்களும் பிராணிகளும் ஒன்றுக்கொன்று எவ்வாறு ஒன்றியுள்ளன என்று உயிர்நூல் வல்லுநரும் காட்டுத்துறை அலுவலாளர்களும் அச்சிலும் பேச்சிலும் அறிவுறுத்தல் வேண்டும். மலர்கள், பிராணிகள் படங்கள் உள்ள சிறு புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும்,

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் ஆடுபன் (Audubon) சங்கம் அரசாங்கத் தொடர்பில்லாததாகவும் குடிகளால் நடத்தப் படக் கூடியதாகவும் உள்ளது. இச்சங்கம் அங்கு எத்தனையோ வனவிலங்குப் புகலிடங்களையும், வனவிலங்குப் பூங்காக்களையும் பாது காத்து வருகின்றது. இச் சங்க அங்கத்தினரிடையே வசூலான தொகையைக் கொண்டு வனவிலங்குப் பாதுகாப்பாளர்களு (Game wardens) க்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இச் சங்கம் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு இயற்கை வளத்தி லும், தாவரவிலங்குவகைகளிலும் ஆர்வத்தை யுண்டுபண்ண, கோடை காலப் பாசறைகள் (Summer camps) இயற்கைஎழில்வாய்ந்த இடங் களில் நடத்துகின்றன. பறவைகள், விலங்குகள் இயற்கைக்காட்சிகள் முதலியவற்றை வரைதல்போன்ற போட்டிகள் பள்ளிமாணவ மாணவி களிடையே நடத்தப்படுகின்றன. மண்ணரிப்பு எவ்வாறு ஏற்படு கிறது? அதை எப்படித் தடுக்கலாம் என்று செய்முறையில் காட்டப் படுகின்றது.

நம் நாட்டிலும் இதுபோன்ற சங்கம் நிறுவப்படவேண்டும். நீல கிரிக் கானுயிர்ச்சங்கம் (Nilgri game association) அல்லது பழனிக் கானுயிர்ச் சங்கம் முதலியன யாருக்குத் துப்பாக்கி அனுமதி வழங்க லாம் அல்லது எந்த மிருகங்கள் பாதுகாப்புக்குரியன என்ற கேள்வி களில் கவனத்தைச் செலுத்துகின்றனவே யொழிய, பிற்காலக் குடிக ளாகிய சிறு பள்ளிப்பிள்ளைகளுக்கு இயற்கைவளத்தைப் பற்றிய ஆர் வம் அன்பு இவற்றை யூட்டுவதில் பாடுபடுவதாகத் தெரியவில்லை. இத்துறையிலும் மேற்கூறிய சங்கங்களின் அங்கத்தினர் சிறிதளவா கிலும் தொண்டாற்றினல் நன்று. வாழ்க நம்இயற்கை வளம்! வாழ்க நம் தாவரங்களும் விலங்குகளும் !!

*இலக்கியச் சூழ்நிலையில் புராணங்கள்

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

நம் தமிழ் இலக்கியத் தோற்ற வளர்ச்சிகளுக்கு நம்தமிழகத்தில் நிலவிய சூழ்நிலைகளுள், புராணவரலாறுகள் போதியஇடம் பெற்றுள்ளன. புராணங்கள் யாவும் சமய வாழ்வை நிலைக்களமாகக் கொண்டவை. சமயங்களின் வளர்ச்சிக்கும் செல்வாக்குக்கும் ஏற்பவே புராண வரலாறுகள் பயின்றுள்ளன. தமிழகத்துக்கெனத் தனியே நாட்டுவரலாறு இதுகாறும் எவராலும் எழுதப்படவில்லை; ஆயினும் இப்போது நிலவும் ஆராய்ச்சிச்சூழ்நிலையால் ஒருவாறு அவ்வரலாற்றை நாம் காணமுடிகிறது. அதனால் நம் தமிழிலக்கிய வரலாறு சங்ககாலம், இருட்காலம், பல்லவர்காலம், இடைக்காலப் பாண்டிய சோழர் காலம், விசயநகரவேந்தர் காலம், முகமதிய ஐரோப்பியர் காலம், விடுதலைக் காலம் என ஏழு பிரிவுகளாகக் காட்சியளிக்கிறது.

சங்ககாலவாழ்வில் மக்களிடையே மனையின் அகத்தே காதலின்பமும், புறத்தே வீரமும் பொருளும் நல்கும் புகழ்விருப்பமும் மேம்பட்டு நின்றன. மனையகத்தே பெறும்இன்பம் நாடிக் கடவுள் வழிபாடும் புறத்தே வெற்றியும் பொருளும் குறித்துத் தெய்வ வழிபாடும் சிறப்புறநடந்தன. வினையுணர்வும் மறுபிறப்புணர்ச்சியும் துறவுநெறியும் சமயவாழ்வில் நிலைபெற்றிருந்தன. அறவோர்க்களித்தலும் துறந்தாரைப் பேணலும் விருந்துபுறந்தருதலும் சிறந்த வாழ்க்கை அறமாயின. இதனையே நாடாளும் வேந்தரும் நன்குபுரிந்து புகழ் பெற்றனர். நாட்டுமக்கள் இம்மை, மறுமை, வீடுபேறு என்ற மூன்றுவகை வாழ்வு உயிர்க்குஉண்டு என்று கருதினர். இம்மையாவது இவ்வுலக வாழ்வு; இதன்கண் நல்வினையால் நல்லறவாழ்வு நடத்துபவர் மறுமையாகிய மேலுலகில் தேவராய் இன்புறுவர். தீவினைசெய்யும் தீயவர் கீழாகிய நரகத்தில் கிடந்து துன்புறுவர். இயற்கையாக எய்தும் துறவுள்ளத்தால் மெய்யுணர்ந்து அவா அறுக்கும் மேலோர் எல்லா உலகத்துக்கும் மேலாகிய வீடுபேறெய்துவர்; வீடுபெற்றவர் மீளம்

* இது, 5—4—56-ல் திருச்சி வானொலியிற் பேசியது.

பிறப்பதில்லை; தேவராய் மேலுலகம் புகுந்தவர் மீள மண்ணுலகில் பிறப்பர்; அவர்கட்கு இன்பமும் துன்பமும் உண்டு. தேவர்களில் உயர்ந்தவர்கள் நிலவுலக வாழ்க்கையை நன்கு கண்டவராதலால் அவர்கள் மக்களுக்கும் தேவர்களுக்கும் மேலாய்நின்று, மண்ணுலகில் உயிர்களை அச்சுறுத்தி வருத்தும் நீர், நெருப்பு, காற்று, மழை, மின்னல், இடி, கடல், ஆறு, குளம், குன்று, மலை, காடு முதலியவற்றிற்குத் தலைமைதாங்கி அடக்கியாளுவர்! அவர்கள் மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் இயங்கிக்கொண்டிருப்பர். அவர்களை வழிபடுவது சமயநெறியாக இருந்தது. அப்படி நிலவிய தெய்வங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலங்களில் முறையே முருகன், மாயோன், இந்திரன், வருணன், காளி என்று குறிக்கப்பெற்றிருந்தன. தெய்வங்கட்கு எல்லாம் வேறாய் ஒன்றாய் வீட்டுலகில் வீற்றிருப்பது கடவுள்; அது மக்களுலகிலும் தேவருலகிலும் உலகு உயிர்களோடு உடனாய்நின்று இன்பமே அருளும் இயல்பிற்று. அக் கடவுளையே, இறைவன், முதல்வன், செம்பொருள் என்று சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. சங்கக்காலத்தவர்க்குக் கடவுள் ஒன்று தெய்வங்கள் பல.

கடவுளுக்கும் மண்ணுலக வுயிர்கட்கும் இடையே நிற்கும் தெய்வங்கள், மக்களுடைய வழிபாட்டை ஏற்றுக் கடவுள் அருளாணையால் நலம்பெறத் துணைபுரியும். பகைப்பொருளை வெல்வதற்கும் துன்பத்தினின்று தம்மைக் காத்தற்கும் துணைபுரிந்தன. இதனால் இத் தெய்வங்களின் வரலாறுகள் பல மக்கள் வாழ்வில் வழங்கிவந்தன. வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டெழுந்த இலக்கியங்களில் அவ் வாலாறுகளும் இடம்பெற்றன.

குறிஞ்சிநிலத் தெய்வமான முருகனைப்பற்றிய வரலாறுகளில் முருகன் தாமரைப்பூவில் பிறந்ததை "நிவந்தோங்கு இமயத்து நீலப் பைஞ்சுனை, பயந்தோர் என்ப பதுமத்துப் பாயல்" எனப்பரிபாடலும் "நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை, ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப, அறுவர் பயந்த ஆலமர் செல்வ" எனப் பத்துப்பாட்

டும் கூறுகின்றன. முருகன் கடலிடத்தே இருந்து குறும்பு செய்த சூரவன்மாவின் காவல்மரமான மாத்தைத் தடிந்து அவனையும் கொன்று மேன்மையுற்றான் என்பதை

"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணாக்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல் வேள்"

என்று பதிற்றுப்பத்தும் பிறவும் கூறுகின்றன. முருகன் குறிஞ்சி நிலத்தவர் மகளான வள்ளியை மணந்த செய்தியும், "குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்று" என்று பத்துப் பாட்டும் "முருகு புணர்ந் தியன்ற வள்ளி போல" என நற்றிணையும், "குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளி தமர்" எனப் பரிபாடலும் குறிக்கின்றன. முல்லைநிலத் தெய்வமான மாயோன், கண்ணனாய் முல்லைநிலத்து ஆயரிடையே யமுனைக்கரையில் விளையாடியது

"வடாஅது
வண்புனல் தொழுநை வார்மண லகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்"

என்று அகநானூறும்; கஞ்சன் விடுப்பக் குதிரைவடிவில் வந்த அசுரனை வென்றது

"காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகைகண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான்று இன்னல்கொல்
மாயோன்அன்று உட்கிற்றுஎன் நெஞ்சு."

என்று கலித்தொகையும் காட்டுகின்றன.

இவ்வாறே மருதத்திற்குரிய தெய்வமான இந்திரன் ஏனைத் தெய்வங்களுடன் முருகனுக்குப் படைபல அளித்த செய்தியும், அகலிகை பொருட்டுப் பூனைவடிவிற் சென்று மேனியெங்கும் கண்பெற்ற செய்தியும் பரிபாடலில் காணப்படுகின்றன.

"இந்திரன்பூசை இவள் அகலிகை இவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படிஇது என்று உரைசெய் வோரும்"

எனப் பரிபாடல் கூறுவது காணலாம். பாலைக்குரிய கொற்றவை முருகனுக்குத் தாய் என்பதை "கொற்றவை சிறுவ" என்றும் "கொற்றவையைப் பழையோள்" என்றும் பத்துப்பாட்டுப் பகர்கின்றது. இப்போது கிடைத்துள்ள சங்கஇலக்கியங்களில் வருணனைப் பற்றிய வரலாறு ஏதும் எங்கும் எவராலும் குறிக்கப்படவேஇல்லை.

இத்தகைய தெய்வங்கட்கெல்லாம் மேலாய் வேறாய் ஒன்றாய் உடனாய் நிலவும் கடவுள் நிலையில் சிவபெருமானை வைத்து இறைவன் என்ற சொல்லால் அவனைச் சிறப்பிக்கும் வரலாறுகள் பல சங்க இலக்கியங்களில் உள்ளன.

சிவன், பிறைமுடியும் முக்கண்ணும் உடையனாய், நஞ்சுண்டு அருளின வரலாற்றை

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன்"

என்று புறநானூறும், "பேரிசை நவிரம் மேஎ யுறையும், காரி யுண்டிக் கடவுள்" என மலைபடுகடாமும் கூறுகின்றன. முப்புரம் எரித்த வரலாற்றை

"ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற"

என்று புறநானூறும்

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயமசெய் அவுணரைக்
கடந்தரு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்"

என்று கலித்தொகையும்

"உமை யமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்"

எனப் பத்துப்பாட்டும் கூறுகின்றன.

இவ்வாறு தேவரும் அசுரரும் தம்மிற்செய்துகொண்ட போரும் பிறவுமாகிய இப் புராணவரலாறுகளோடு இராமாயணம் பாரதமாகிய இதிகாச வரலாறுகளும் சங்ககாலச் சமயவாழ்வில் பயின்றுள்ளன. இராமன் இலக்குவனும் சீதையும் உடனாகக் காடுசென்றபோது இராவணன் சீதையைத் தூக்கிச்சென்றகாலை அவள் கழற்றியெறிந்த அணிகளைக் கிட்கிந்தையில் குரங்குகள் எடுத்த செய்தியை,

"கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதாணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாங்கு"

எனப் புறநானூறும்,

இராமன் கோடிக்கரையில் ஆலின்கீழ் இருந்து கடலில் ஆணையிட்ட குறிப்பை,

"வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பவ்வம் இரங்கு முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம்"

என அகநானூறும்,

இராவணன் கயிலைமலையை எடுத்த வரலாற்றை,

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல"

எனக் கலித்தொகையும் தெரிவிக்கின்றன.

பாரதக்கதை சங்ககாலத்தில் மக்களிடையே பரவியிருக்கிறது. பாண்டவர்இருந்த அரக்குமாளிகை தீப்பட்டபோது வீமன் ஏனையோரை முன்னறிந்து காத்ததும் தன்தந்தையாகிய துரோணனைக்

கொன்றானை அசுவத்தாமன் இரவிற்சென்று உயிர்கவர்ந்ததும் கலித்தொகையிலும், அருச்சுனன் காண்டவ வனத்தை எரித்த செய்தியைக் "காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப், பூவிரி கச்சைப் புகழோன்" எனச் சிறுபாணாற்றுப் படையிலும் வேறுசெய்திகளைப் புறநானூறு பதிற்றுப்பத்திலும் காணலாம்.

சங்ககால இலக்கியங்களில் சுமார் 2400 பாட்டுக்கள் உண்டு; ஆயினும் மேலேகண்ட புராண இதிகாசக் குறிப்புக்கள் அடங்கிய பாட்டுக்கள் இருபத்தைந்து முப்பதுக்குமேல் இல்லை; இதனால் சங்ககால இலக்கியச்சூழலில் அத்துணைச் சிறந்த இடத்தைப்பெறவில்லை; மாவும் புள்ளும் மாக்களுமாகிய உயிர்ப்பொருள் நிகழ்ச்சிகளே சங்க இலக்கியங்கள் முழுதும் நிறைந்துள்ளன. நூற்றுக்கு ஒன்று இரண்டாய் அரும்பித் தோன்றிய புராணக்கதை சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரம் மணிமேகலை என்ற பெருங்காப்பியங்களில் சிறிதுபெருகித் தோன்றுகிறது. சிலப்பதிகாரத்தை நோக்க மணிமேகலை காலத்தாற் பிற்பட்டதாயினும், அது பெரிதும் பௌத்த சமயச் சூழ்நிலையிலேயே தோன்றி வளர்ந்த காரணத்தால் புராணக் கதைகளைப் பயிலும் திறம் இல்லாதாயிற்று. என்றாலும் வாணனது நகரத்தில் கண்ணன் தன்மகன் பொருட்டுப் பேடிக்கோலம் கொண்டு கூத்தாடியதும், இந்திரன் அகலிகை காரணமாக ஆயிரங்கண் பெற்றதும், அக்கினித்தெய்வம் காமவேட்கைகொண்டு அலைந்ததும், திருமால் இராமனாகத்தோன்றி மயங்கியதும், அவர் பத்து அவதாரம் கொண்டதும், வாமனவதார நிகழ்ச்சியும் ஆகிய இவைகளே மணிமேகலையில் சிறுசிறு குறிப்புக்களாகத் தோன்றுகின்றன. இளங்கோவடிகள் வாழ்ந்த சேரநாடே ஏனைச் சோழ பாண்டிய நாடுகளைவிட வடபுலத்துப் புராண இதிகாசக் கருத்துக்களை முதற்கண் மேற்கொண்டது என்பது வரலாறு காட்டும் உண்மை; அதனால் சேரர் இளங்கோ பாடிய சிலப்பதிகாரம் இப் புராண இதிகாசக்குறிப்புக்களை ஏனை இலக்கியங்களைவிட மிகுதியாகக்கொண்டிருக்கிறது. சங்ககாலப் புராண இதிகாசக் கதைகளின் வேறாக, சிவனும் கொற்றவையும் முருகனும் கண்ணனும் பலவேறு கூத்துக்களை ஆடியதும், சிவன்கண்ணை

உமையம்மை மறைத்ததும், கொற்றவை தாருகன் உரம் கிழித்ததும் மகிடாசுரனைக் கொன்றதும், இந்திரன் மலைகளின் சிறகை யரிந்ததும், இந்திரன் மகன் சயந்தன் அகத்தியனல் சாபம் பெற்றதும், சோழ பாண்டியர்கள் இந்திரனுக்குத் துணைபுரிந்து ஐவகை மன்றம் கொணர்ந்ததும், இந்திரனொடு பொருது பாண்டியர் அவனது ஆரமபெற்றதும், அவன் முடிமேல் வளையெறிந்ததும், இந்திரன் அவை மகளிரான உருப்பசி சாபம்பெற்றதும், பாண்டியனொருவன் திலோத்தமையைக் கூடிச் சாரகுமாரனைப் பெற்றதும், சந்திரன் திருமாலின் மார்பில் பிறந்த குறிப்பும், திருமால் பாற்கடலில் அரவின்மேல் கிடந்து அறிதுயில் கொண்டதும், நரசிங்கவுருக் கொண்டதும் பிறவும் இளங்கோ காட்டும் புராணக்கதைகள். இதிகாசமாகிய இராமாயண நிகழ்ச்சிகளோடு பாரதக்கதையில் காணப்படும் நளன்கதையுடன் கண்ணன் சூரியனைச் சக்கரத்தால் மறைத்த நிகழ்ச்சியும் பாண்டவர் பொருட்டுக் கண்ணன் தூதுபோனதும், கண்ணன் குவலயாபீடம் என்ற யானையைக் கொன்றதும் இடம்பெறுகின்றன. தேவர் அமுதம் வேண்டிக் கடல்கடைந்ததும்; தேவாசுரப்போர் 18 ஆண்டு நடைபெற்றதும், சோழருள் தூங்கெயிலெறிந்த சோழன் குறிப்பும், மனுச்சோழன் முசுகுந்தன் வரலாறும், பாண்டியருள் ஒருவன் கைகுறைத்துக் கொண்டதும், கடல்மேல் வேல்விட்டதும் மேகத்தைப் பிணித்ததுமாகிய புராணவரலாறுகள் பெருகியுள்ளன.

சிலப்பதிகாரத்துக்குப்பின் களப்பிரர் என்னும் நாடோடிகள் தமிழகத்திற் புகுந்து சீரழித்தனர். தமிழிலக்கியங்கள் பல அழிந்தன; தமிழர் அரசியற் சிறப்பும் வாழ்க்கை முறையும் நிலைகுலைந்தன. அக்காலத்தே சமணம் முதலிய சமயங்களும் வடநூற் சாதிப்பிரிவினைக் கொள்கைகளும் புகுந்து சமய சமுதாய நிலைகளின் ஒருமைப் பண்பாட்டை உருவழித்தன. களப்பிரின் கொடுமையிருள் பின் வந்த பாண்டிமன்னராலும் பல்லவர்களாலும் ஒருவாறு நீங்கவும், குறிஞ்சி முல்லை முதலிய தமிழர் திணைநிலை வாழ்வு மாறியது. முருகன் மாயோன இந்திரன் முதலிய தெய்வவழிபாடுகள் சிறப்பிழந்தன. சிவவழிபாடும் திருமால் வழிபாடும் தலைதூக்கி நிற்க முற்பட்டன. தமிழகத்திற் சிலபல விடங்களில் சிவன் கோயில்களும் திருமால் கோயில்களும் சிறப்புற்றன. பல்லவர் காலத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோரும் திருமங்கையாழ்வார் நம்மாழ்வார் முதலியோர்களும் தூங்காத்தன்ன சிவன் கோயில்கட்டும்

திருமால் கோயில்கட்கும் சென்று தம்முடைய செந்தமிழ்ப்பாக் களால் சிறப்பித்து, களப்பிர ஸிருளால் குன்றிய சமயஒளியை விளங் கச் செய்தனர். பல்லவவேந்தரும் பாண்டியமன்னரும் சைவராயினர். புதிதுபுகுந்து அரசில் செல்வாக்குப் பெற்றிருந்த சமணமும் புத்த மும் வலிகுன்றின. சைவத்துக்குத் தேவாரமும் வைணவத்துக்குத் திவ்வியப்பிரபந்தமும் தோன்றி அரண்செய்தன.

திவ்வியப்பிரபந்தம் தோன்றியகாலத்தில் சமயஇலக்கியச் சூழ் நிலையில் இராமாயணமும் பாரதமும் கண்ணன்வரலாறுகூறும் பாகவத புராணமும் சிறந்த இடம் பெற்றிருந்தன. பிரபந்தம் முழுதும் இதி காசக்கதைகளும் பாகவதச் செய்திகளும் நிரம்பி, இயற்கைச்சூழ்நிலை காட்டும் நிகழ்ச்சிகள் போதிய இடம்பெறுவண்ணம் செல்வாக்கு மிகுந் தன. தேவாரத் திருமுறைகள் சங்க இலக்கியங்களிலும் பின்வந்த சிலப்பதிகார முதலியவற்றிலும் அரும்பி நின்ற புராண இதிகாசக் கதைகளை மிகுதியாக மேற்கொண்டு அவற்றுக்கே முதலிடம் தந்து சிறப்பித்தன. இதனால் தேவார காலத்துத் தமிழ்ச் சமுதாயம் சிவ னைப் பற்றிக்கூறும் புராண வரலாறுகளைக் கேட்டுப் பெருமகிழ்வு கொண்டிருந்தமை தெரிகிறது. சிவன் தேவர்பொருட்டு நஞ்சுண்ட தும் புரமெரித்ததுமாகிய பழஞ் செய்திகளுடன், தக்கன் வேள்வி செற்றது, தாருகவனத்து முனிமகளிரைச் சிந்தைகலக்கியது, மார்க் கண்டன் பொருட்டுக் காலனை வதைத்தது, சிவன் கணபதியைப்பெற் றது, மாலுக்குச் சக்கரப்படை அளித்தது, மாலும் பிரமனும் காணா வகையில் சிவன் உயர்ந்து நின்றது, நால்வர்க்கு அறம் உரைத்தது, விசாரசருமர்க்குச் சண்டீசபதம் தந்தது முதலிய புராணப் புதுச் செய்திகள் இலக்கியவுலகில் இடம்பெற்றன. திருவாசகம் முதலியன தோன்றியபோது நரிபரியாக்கியது பிட்டுக்கு மண்சுமந்தது பாண்டிய னால் சிவன் அடிபட்டது முதலிய புதுவரலாறுகள் புராணச் சூழலில் புகுந்தன.

பல்லவகாலத்தில் எழுந்த சைவநாயன்மார்களும் வைணவ ஆழ் வார்களும் செய்த சமயப்பணியால் நாட்டில் எழுந்த கிளர்ச்சியின் பய னாகப் பௌத்தம் மறைந்தது, சமணசமயம் செல்வாக் கிழந்து வீழ்ச்சியுற்றது. ஆயினும், தமிழகத்தில் ஆங்காங்கிருந்த சயின சங் கங்களின் முயற்சியால் சமணமுனிவர்கள் தமிழ்இலக்கியத் துறையில் பணிபுரியத் தொடங்கிச் சிறுகாப்பியங்களும் பெருங் காப்பியங்களும் இலக்கணநூல்களும் எழுதினர். பல்லவர் ஆட்சிக்குப்பின் சோழ

பாண்டியரது ஆட்சி தமிழ்நாடு முழுதும் செழித்துநின்றது. அவர் காலத்தே சமணசான்றோரது காப்பியங்களுள் சீவகசிந்தாமணி சூளாமணி, பெருங்கதை என்ற பெருநூல்கள் இலக்கியச் சூழலில் சிறந்து விளங்கின. அக்கால மக்களிடையே சைவவைணவ சமயத்தில் நிலவிய புராணக்கதைகள் பேராதரவுகொண்டுநின்றன. புராணவரலாறுகள் கோயில்களில் விழாக்கள்வாயிலாகவும் திருநாட்கள்வாயிலாகவும் பரவிவந்தன. பௌராணிகரது செல்வாக்கும் சிறந்துநிற்கத் தலைப்பட்டது. அதனால் சமணசான்றோர் செய்த காப்பியங்களிடையே இந்தப் புராணவரலாறுகள் சிந்தாமணியில் புகவேண்டிய இன்றியமையாமை பிறந்தது. சிவன் முப்புரம்எரித்ததும் திருமால் அம்பானதும் தேவரும் அசுரரும் கடல்கடைந்ததும் முதலிய பழஞ்செய்திகளோடு சிவபெருமான் மலையரசன் மகளை மணந்ததும், காமனைக் காய்ந்ததும், இராமன் மராமரம் எய்ததும், கண்ணன் பாரதப்போரில் சங்கோசை எழுப்பியதும் புதுவனவாகப் புகுந்தன. சூளாமணியென்பது கண்ணனைப்பற்றிக் கூறப்படும் வரலாறுகளையொப்ப விசயதிவிட்டர் வரலாறுகளை எடுத்துரைத்து இடைஇடையே பழைய புராணவரலாறுகள் சிலவற்றை உரைத்து நின்றது. பெருங்கதையில் கொங்குவேளிர் பத்திராபதி யென்னும் தேவமகள் யானையாகப் பிறந்ததும், இந்திரன் அவுணர்களை வென்றதும், சந்திரன் ரோகணியை விரும்பியதும், சீதை நிலத்தில் புகுந்ததும், கன்னன் அபிமன்னனுடைய வின்னாணை யறுத்ததும், வீமன் கௌரவர் நூற்றுவரைக் கொன்றதும் பிறவும் புதியவாகப் புணர்த்துக் காட்டப்பட்டன.

பின்னர்ச் சைவவுலகில் ஒட்டக்கூத்தரது தக்கயாகமும், திருஞானசம்பந்தர் வரலாறும், சேக்கிழாரது திருத்தொண்டர் புராணமும் தோன்றிப் புராணங்களுக்கு ஆதரவுசெய்தன. இவற்றினிடையே பழம்புராண இதிகாச வரலாறும் சீர்த்த இடம்பெறக் கண்டதும், இலக்கியப் புலவர்களுள் சிறந்துநின்ற கம்பர், இதிகாசவகையான இராமாயணத்தைத் தனியாக மேற்கொண்டு கம்பராமாயணத்தையும், பின்வந்த சான்றோர் புராணவகையான முருகன்வரலாற்றை வரைந்துகொண்டு கந்தபுராணத்தையும், கோனேரியப்பர் முதலியோர் உபதேசகாண்டத்தையும், ஒப்பிலாமணி தேசிகர் முதலாயினோர் சிவரகசியம் முதலியவற்றையும் தனித்தனியே பல்லாயிரம் பாட்டுக்களில் விரித்துரைத்தனர்.

சிவனுடைய திருக்கோயில்கள் வீரர்களைப்பற்றிய புராணச் செய்திகள் சில சைவத்திருமுறைகளில் குறிப்பாகச் சைவ நாயன்மார்களால் குறிக்கப்பட்டிருந்தன; எல்லையில்லாத பலபுராணச் செய்திகள் வடமொழியில் உள்ளன என்று கொண்டு அவற்றைத்தமிழ்ப்படுத்துவதாகத் தலபுராணங்கள்பல பிற்காலத்து எழுந்தன. ஆங்காங்கிருந்த சைவ மடங்களில் வாழ்ந்த சான்றோர் சிலர் தலபுராணங்கள் எழுதினர். பாண்டிநாட்டுத் திருப்புத்தூரிலிருந்த சைவ மடத்துச் சான்றோர் ஒருவர் ஒக்குகோயில்புராணம் பாடினர்என அவ்வூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது. தலபுராணங்களின் தோற்றம் வளம் பெற்றகாலம் சோழ பாண்டியருடைய வீழ்ச்சிக் காலமும் விசயநகர வேந்தரது ஆட்சிக்காலமுமாகும்.

இவ்வாறு தோன்றிய தலபுராணங்களுள் சிவஞான முனிவர் பாடிய காஞ்சிப்புராணமும், கச்சியப்ப முனிவர் பாடிய தணிகைப் புராணமும், பரஞ்சோதிமுனிவர் பாடிய திருவிளையாடற் புராணமும், நிரம்பவழகியதேசிகர் பாடிய சேதுபுராணமும், சைவஎல்லப்ப நாவலர் பாடிய செவ்வந்திப் புராணமும், திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய குற்றாலத்தலபுராணமும் சிறந்து நிற்கின்றன. தலபுராணத்தின் வளர்ச்சி சென்றநூற்றாண்டில் விளங்கிய திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் உயரிய நிலையையடைந்து நின்றது. அவர்களால் செய்யப்பட்ட தலபுராணங்கள் மிகப் பலவாம்.

தலபுராண வரலாறுகள் பிற்காலத்தே பழையன சிலவும் புதியன பலவும் கொண்டு இயற்கையறிவு வரம்பைக்கடந்து செல்லத் தலைப்பட்டன. தெய்வங்கள் பலவற்றின்மேல் மக்களில் கீழாயினர் செயலினும் கீழானசெயல்களை ஏற்றி யுரைத்ததும் உண்டு. அதனால் அவை கற்பார் சூழலில் செல்வாக்கிழந்து நிற்பவாயின. அவற்றின் இலக்கிய நலமும் பேணுவாரற்றுப் போயின. இன்றைய திரைப்படங்களிலும் அவை பொதுமக்களிடையே சிறப்பிழந்து நிற்கின்றன.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்படும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ம.
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கைலைசச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கனுநால் (5) இனியநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினுவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒருரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.